மாணவர்-மகளிர்-தொழிலாளர்

Phone No. 4502 Regd. No. M. 5458

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிட தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (18—9—49) ❁ வெளியூர் (19—9—49) | இதழ் 40

ஓரணியில்!

ஆளவந்தார்களின் அகிம்சை அம்பலமாகிறது!

அமைச்சர் குழு மாறினாலும் ஆளும் போக்கு மாறப்போவதில்லை!

வங்கத்தில் வம்பும் - தும்பும்!

மந்திகை மலர் மாலையாகிறது, ஆளவந்தார்களின் ஆட்சி. அன்னிய ஆட்சியில், பேசிய அகிம்சை, தினம் தினம், சொந்த ஆட்சியில் கொலை செய்யப்பட்டு வருகிறது. சென்னை-பம்பாய்-பீகார் மத்திய மாகாணம்- ஐக்ய மாகாணம்-கீழ் பஞ்சாப்-வங்காளம்-அஸ்ஸாம்—எல்லா காங்கிரஸ் ஆட்சியில் உள்ள மாகாணங்களிலும், ஆட்சிப் போக்கு ஒன்றாகத்தான் இருக்கிறது இந்திய யூனியனோடு இணைக்கப்பட்டுள்ள சுதேச சமஸ்தானங்களிலும், ஆளவந்தார்களின் போக்கு ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. எங்கும் வறுமை, எங்கும் இல்லாமை, எங்கும் வேலையின்மை, எங்கும் அதிருப்தி, என்ற நிலைமையில் தான் இந்த நாட்டு மக்கள் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள்

வெள்ளையர் வெளியேறினால், வேதனைத் துடைக்கப்பட்டு. இன்ப நிலை தானே வந்து எய்தும் என்று, அடிமை இந்தியாவில் அன்றொரு நாள்; இன்று ஆளவந்தார்களாக உள்ளவர்கள் செய்து வந்த ஆர்ப்பாட்டங்களை, பேசிய தேன்மொழிகளை, மக்கள் கேட்டனர்—களிப்பெய்தினர்-கருதியதை முடிக்கக் கடனாற்றினர்; முடிந்த வரையில். நிலைமை மாறியது! அடிப்படி அனுபவித்தவர்கள் நாட்டின் ஆளவந்தார்களாக மாறினர். மக்களை மறந்தனர். மக்களுக்குச் செய்ய வேண்டியபணியினைத் துறந்தனர். சொந்த வாழ்வைச் சிறப்பித்துக் கொண்டனர். மண்குடிசைகள் மாறி மாளிகைகளில் குடிபுகுந்தனர். கட்டை வண்டி கைவிடப்பட்டு கார் ஏறிச் செல்லும் சந்தர்ப்பம் பெற்றனர். காற்றைப் புசித்துக் கடும்பசித்தணித்தோர், அறுசுவை அருந்தி ஆனந்தம் அடைந்தனர்.

இந்த நிலைமை-மாற்றத்தை—ஆளவந்தார்கள் பெற்றுள்ள புதுவாழ்வை, மக்கள் கண்டிருந்து பார்க்கலாயினர். ஆளவந்தார்களின் வாழ்க்கை நிலையைத் தங்கள் நிலையோடு ஒப்பவைத்து நோக்கினர். அன்னியர் ஆட்சியில் அடைந்த இன்னல்கள் அனைத்தும், தங்கள் விஷயத்தில் மட்டும் தொலையாதிருக்கக்காரணம் காண, கருத்துக்கொண்டனர். ஆளவந்தார்களின் கள்ளச் சிந்தையை, வெள்ளை உள்ளம்கொண்ட மக்கள் விளக்கமாகத் தெரிந்துகொண்டனர். முன்னாள் பூஜித்தவர்களைப் ... முனைந்தனர். அவர்கள்

முகமலர்ச்சியோடு பார்த்தவர்களை, இன்று முறைத்துப் பார்க்க முன்வந்தனர். அந்தக் காலத்தில் எதிர்பேசாது, இட்ட கட்டளையை நிறைவேற்றி வந்த மக்கள், ஆளவந்தார்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்க ஆரம்பித்ததோடு, அதட்டிக் கேட்கவும் துணிவு கொண்டனர்; சட்டத்தை மீறவும் முடிவிற்கு வந்தனர்!

மக்களின் மனு மகஜர், கேள்வி கண்டனம், ஆளவந்தார்களுக்கு நற்புத்தியைக் கொடுக்கத்தவறி விட்டன. மக்களின் கதறலை, மதித்து, போக்கை மாற்றிக் கொள்ள மதி பெறவில்லை மந்திரிகள். அதிகாரம் இருக்கிறது என்னும் ஆணவத்தில், அடக்குமுறைகளை, அதிருப்தி கொண்ட மக்கள் மீது சரமாரியாக வீசி எறிந்தனர், ஆளவந்தார்கள்.

கூட்டங்களுக்குத் தடை - ஊர்வலத்திற்குத்தடை- நாடகங்களுக்குத் தடை-பத்திரிகைகளுக்குத் தடை—என்ற முறையில், சட்டமில்லாசட்டங்கள் செய்து, மக்கள் மனத்தைப் புண்படுத்தி விட்டனர். மக்களிடம் மறைந்து கிடக்கும் மிருக சுபாவத்தைத் தூண்டிவிட்டனர் — தூண்டிக் கொண்டு இருக்கின்றனர் ஆளவந்தார்கள். மக்கள் சக்தி வீறிட்டு எழுகிறது கண்டு, ஆளவந்தார்களின் வீம்பும் வளர்ந்து கொண்டே வருகிறது.

மக்கள் சக்தியைப் பெரிதெனப் பேசி, வெள்ளையர்களை மிரட்டி வந்தவர்கள், ஆளும் நிலை பெற்றதும், முன்னாள் சொன்னதை மறந்து மக்கள் சக்தியைத் தடியடியாலும், துப்பாக்கியாலும், சிறைத்தண்டனையாலும் தகர்த்து விடலாம் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். சொந்த அனுபவத்தையே, தங்கள் பதவி பெறுவதற்குக் காரணமாக இருந்ததையே, வரலாறு தரும் படிப்பினையையே, மறந்து நடக்கும் பதிபெற்றவர்களை, ஆளவந்தார்களைத் தவிர, உலகில் வேறு எங்கும் காணமுடியாத அதி அற்புதமாகும்.

தொழிலாளர் கூலி உயர்வு கேட்டாலும்; வேலையற்றோர் வேலை கேட்டாலும், ஆசிரியர்கள் வாழ்வு உயரக் கேட்டாலும், சர்க்கார் ஊழியர்கள் வயிற்றைக் காட்டினாலும், வீட்டு வசதி கேட்டாலும், இவ்வாறு கேட்போர் அனைவரும், மக்களாகத்

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

ஆங்கிலம் புகுந்த முறையை மறக்காதீர்!

அங்கேயே அதற்கு அந்த இலட்சணம்!

அரசாளவேறு ஆசைப்படுகிறது!

ஐக்கிய மாகாணத்தின் தாய் மொழி; அதுதான் இருக்கிறதே, ஆதிக்க வெறி கொண்டலையும் ஹிந்தி மொழி, அதற்கு; அம் மாகாண மக்களிடம் எவ்வளவு ஆதரவு இருக்கிறது தெரியுமா? வெளியில் சொல்லவே வெட்கமாக இருக்கிறது!

சிலநாளைக்குமுன், அங்குள்ள நீதிஸ்தலங்களில் அலுவல் பார்க்கும் ஊழியர்களுக்கு, ஹிந்தி மொழியில் பரீட்சை ஒன்று வைக்கப்பட்டது. எப்படி இருந்தது பரீட்சையின் முடிவு என்று கருதுகிறீர்கள்? பரீட்சையில் கலந்து கொண்டவர்கள் அனைவரும், பரீட்சையில் தேர்ந்து விட்டிருப்பார்என்றுதானே? அது தான் கிடையாது! ஒருவர் தவறுமல நாமம் சாத்திக்கொண்டார்கள்! சொந்தத் தாய் மொழியில் தேர்வு பெறுவதற்குக்கூட அவர்களுக்கு ஹிந்தி மொழியில் பயிற்சி இல்லை தாய்மொழியை, அவர்கள்; அந்த அளவிற்குப் புறக்கணித்து வந்து இருக்கிறார்கள். ஹிந்திமொழிக்கு, ஹிந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களிடத்திலேயே அவ்வளவு ஆதரவு இருக்கிறது. சொந்த நாட்டிலேயே, அம்மொழிக்கு மக்கள் காட்டும் ஆதரவு இந்த இலட்சணத்தில் இருக்கிறது. சொந்த மக்களாலேயே புறக்கணித்து, ஒதுக்கித்தள்ளி, மதிப்பிழந்துகிடக்கும் ஹிந்திமொழிக்குத்தான், இந்நாட்டின் அரசாங்க மொழி என்னும் இடம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அம்மொழியைத் தாய மொழியாகக் கொண்டவர்களினுடைய கருத்தையும் கண்ணையும், ஈர்க்க அம்மொழியில் எழிலும், இளமையும், பொருளும் நிறைந்த இலக்கியங்கள் ஒன்று கூட இன்று இல்லை—இலலவே இல்லை. எனவே தான், ஐக்கிய மாகாணமக்கள், தாய்மொழியான ஹிந்தியைக் கற்பதில் ஆர்வம் கொள்ளவில்லை. சொந்த மக்களையே வசிகரிக்கும் பண்பு இல்லாமல் இருக்கும்பொழுது, அம்மொழி; அதற்கு நேர்மாற்றமான இலக்கண இலக்கியங்களைக் கொண்ட மொழியினைத் தாய் மொழியாகக்கொண்ட மக்களை, எவ்வாறு வசிகரித்துக்கொள்ளப் போகிறதோ தெரியவில்லை! என்

னமோ, எனக்கனைவரும் கர்ச்சிக்குப் போய்வருகிறார்' என்று பெருமை பேசிக்கொள்ளும் பதிவை. ஹிந்திமொழி பெறாது விட்டது.

ஆங்கிலேயரின் ஆதிக்கம் இந்தியாவில் உறுதியான பின்னர்தான், அவர்கள் மொழியான ஆங்கிலம் புகுந்தது-இடம்பெறறது! இதுவரலாறு! இந்தப் படிப்பினையை நாம் என்றும் மறந்துவிடக்கூடாது. நமதுநாட்டின் அரசியல் வடநாட்டின் பிடியில் சிக்கி எவ்வளவோ காலமாகிவிட்டது. அதனைத் தொடர்ந்து, அந்த நாட்டின் மொழி இங்கு கட்டாயமாகப் புகுத்தப்படுகிறது. விடுதலை—வேதனை-விடுதலை முயற்சி மேலும் தேவை! மேன்மேலும் தேவை கூடுதலாக, அளவில்—தரத்தில்!

பாமர மனிதன் நிலை உயர வழியுண்டா?

“மாகாண அரசாங்கமும், மத்திய அரசாங்கமும், இதுவரை பல பிரசினைகளைப் பற்றித் தொண்டை வரளக் கூச்சலிடுவதும், கைவலிக்கத் திட்டங்கள் தீட்டுவதுமாக இருக்கின்றனவே ஒழிய, நாட்டு முன்னேற்றத்திற்கு அடிப்படியான விஷயமாகிய பாமர மனிதனின் வாழ்க்கை நிலையை, பொருளாதார நிலையை, நலத்தை அபிவிருத்தி செய்வதற்கு இன்று வரை ஒன்றேனும் செய்யவில்லை” என்று ஓய். எம். சி. ஏ. வர்த்தகக் கல்லூரியின் மாணவர் கழகத்தைத் துவக்கி வைத்த திரு. வி. கே. ஜான் கூறினார்.

பொதுமக்களின் நிலை உயரவழியில்லையே என்று வருந்தும் தோழர் வி. கே. ஜான், ஒரு விஷயத்தைக் கவனிக்க வில்லை. பொது மக்கள் நிலை உயர்ந்து; கல்வியிலும் பொருளாதாரத்துறையிலும் அவர்கள் மேம்பாடடைந்து, விஷயங்களைப் புரிந்துகொள்ளும் அளவிற்கு வந்து விட்டால், தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் எதையாவது கூறி வெற்றி பெறுவதும், ஒரே கட்சி ஏகபோகமாக அரசாங்கம் நடத்துவதும் முடியக் கூடியகாரியமாக இருக்குமா? எவ்வளவு நாளைக்குப் பொது மக்களை இன்றுள்ள சாமான்ய நிலையிலேயே வைத்திருக்க முடியுமோ, அவ்வளவு நாளைக்குக் காங்கிரஸ்காரர்கள் ஏகபோக ஆட்சி செலுத்துவதற்கு வசதியாக இருக்கும். எனவேதான், பொதுமக்களுடைய கல்விநிலையை,

வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்துவது காங்கிரஸ் கட்சிசக்கண்கொண்டு பார்க்கையில், சரியான செயலாகாது என்பதைத் தோழர் வி. கே. ஜான் அறிய வேண்டும்.

புகையிலை உற்பத்தியில் சென்னைக்கு முதலிடம்

உயர்ந்த புகையிலை உற்பத்தியில் சென்னை மாகாணம் முதலிடம் பெறுகிறது, இந்தியா முழுவதிலும் 7 கோடி ராத்தல் புகையிலை விளைகிறதென்றால் அதில் 6 கோடி ராத்தல் புகையிலை சென்னையில் விளைவதேயாகும். அதாவது சென்னை மாகாணத்தில் 2,93,759 ஏக்கர் நிலங்களில் உயர்ந்த புகையிலை உற்பத்தி செய்யப்படுகிறது.

புகையிலை உற்பத்தியில முதலிடம் வகிப்பதுபோன்றே, ஆசிய நாடுகளில் அரிசி உற்பத்தி செய்வதில் தென்னிந்தியா முதலிடம் பெறுமாறு செய்ய அரசாங்கத்தார் முன்வந்து பெரிதும் உழைக்க வேண்டும்.

சென்னையில் நடப்பது இந்துமத ஆட்சியா?

ஆதிதிராவிடர்களுக்கு முழுச்சம்பளச சலுகை தரப்படும் என்றும் மத மாறியிருந்தால் இம் முழுச சம்பளச் சலுகை இல்லையென்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர் மீண்டும் இந்துமதத்திற்கு மாறினால், முழுச சம்பளச சலுகை அளிக்கப்படும் என்றும் கல்வி இலாக்கா அறிவிக்கிறது.

சம்பளச சலுகை என்பது, சம்பளம் கட்ட முடியாத பிற்போக்கிலுள்ள ஆதிதிராவிடர்களுக்கேயன்றி, அவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதை ஆராய்ந்து பார்த்தளிப்பது என்பதன்று கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய ஓர் ஆதிதிராவிடக் குடும்பத்துக் குழந்தைகள் படிக்க வழியற்றிருந்தால் அவர்களுக்கு இச்சலுகை இல்லை யென்பது நேர்மையாகாது.

மதச்சார்பற்ற அரசாங்கம் மீளாப் பிற்போக்கிலுள்ள ஆதிதிராவிடர்களின் மதங்களைப் பற்றிக் கவனித்துக் கொண்டிருக்க வேண்டியது அவசியமில்லாச செயல்.

மேலும் கல்வியிலாக்காவின் இந்த உத்தரவு வேறு மதங்களுக்கு மாறியுள்ள ஆதிதிராவிடர்களை இந்துமதத்திற்குத் திரும்புமாறு அழைப்பது போலவுமிருக்கிறது.

இப்படி யெல்லாம் இந்து மதத்தைக் காப்பாற்றிவிட முடியாதென்பதை அரசாங்கம் உணர வேண்டும். மேலும் மதத்தைக் காப்பாற்றும் வேலை அரசாங்கத்திற்குரியதன்று என்பதையும் கவனிக்கவேண்டும். அந்த மதக்காரர்கள் பார்த்துக் கொள்வர்.

உண்மையில் அரசாங்கம் இந்த மதப்பிரசார—மதமாற்ற வேலையில் இத்தகைய பின் கதவு வழியே நுழையும் முறைகளைக் கையாள்வதில் இறங்கினால், கிறிஸ்தவ ஆதித்திராவிடர்கள் இந்து மதத்திற்கு வந்து அரசாங்கச சலுகை பெற்றுப் படித்துத்தேறிப் பட்டம் பெற்றபின், மீண்டும் தங்கள் பழைய மதங்களுக்கே போய் விட்டால் என்ன செய்வது!

எனவே, இத்தகைய மதமாற்ற வேலைகளை அரசாங்கம் விட்டொழித்து, பிற்போக்கில் சிக்கித் தவிக்கும் இனத்தவர்கள் மக்கள் எந்த மதத்தைத் தழுவியவராயிருந்த போதிலும், முழுச்சம்பளச்சலுகைக் குரியவரே என்று உத்தரவிட்டால் தான், இந்த அரசாங்கம் மதச்சார்பற்ற நிலையில் எல்லோருக்கும் பொதுவானதோர் அரசாங்கமாக நடைபெறுகிறது என்று மக்கள் நம்ப வழி ஏற்படும்.

நாட்டியமாடினார் நாட்டுத் தலைவர்

அஸ்ஸாம் மலைப்பகுதிகளைச் சுற்றிப் பார்த்து வந்த அம்மாகாணக் கவர்னர் திரு. ஸ்ரீ பிரகாசர், காட்டு மக்கள் நடத்திய நாட்டியபத்திலே பங்கெடுத்து நாட்டியமாடினார். அங்கிருந்த இளமங்கை பொருந்தி கவர்னரின் கைபிடித்து இழுக்க, கவர்னர் அம்மக்களை மகிழ்விக்க வேண்டி நாட்டியமாடினாராம்.

காங்கிரஸ் கவர்னர்களும் மந்திரிகளும் மக்களை மகிழ்விக்க அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றுவிக்க முயல்வதற்கு இது ஒரு "மாதிரி" ஆனால், மங்கையுடன் நாட்டியமாடுவதில், மகிழ்ச்சி பெறும் இவர்கள், மக்கள் உள்ளத்தில் மண்டிக் கிடக்கும் வறுமையையும், அதனால் எழும் துயரையும துடைக்கவும் முன் வந்து, மக்களோடு மக்களாய் வாழ்ந்து; அவர்கள் படும் துயரத்தைத்தாங்களும் அனுபவித்தறிந்து, அவற்றைப் போக்குவதன் மூலம், மக்களிடை மகிழ்ச்சி பெருகச்செய்வார்களா?

மக்கள் பணத்தைப் பறிக்கும் வழி

ஆண்டு தோறும் சென்னையில் கண்காட்சிகள் என்ற பெயரால் சில சந்தைக்கடைகள் நடத்தப்படுவதுண்டு. இவை மக்களின் நேரத்தையும் பாழாக்கும் கண்காட்சிகளாக இருக்கின்றனவே ஒழிய, மக்களின் அறிவை வளர்க்க, வாழ்வுப் பண்பாட்டுக்குரிய வழிகளைத் தெரிவிக்க, வாணிகத்தைப் பெருக்கத்தக்க வழிகளை (மேனாடுகளைப்போன்று) போதிப்பவைகளாக இல்லை. எனவே, இத்தகைய கண்காட்சிகளைக் கதர் பேராலோ, சுதேசியத்தின் பெயராலோ, மற்றதின் பெயராலோ நடத்தி மக்களிடமிருந்து பொருளீட்டுவதைச சென்னை நகர சபையும் அரசாங்கமும அடியோடு தடைசெய்துவிட வேண்டும்.

சிறு கைத்தொழில் முறைகள், குடிசைத்தொழில்கள், வாணிக வளர்சசிக்குரிய வழிகள், பயிரிடும் தொழிலில் நகரமக்கள் மனத்தை ஈர்க்கும் காட்சிகள், விஞ்ஞானப் புதுமைகள், நவீன முறையில் பயிரிடுதல் போன்ற இன்னும் பல முக்கியமான விஷயங்களைப் பயன் தரத்தக்க வழியில் விளக்கிக் காட்ட வழி செய்தாலன்றி, இத்தகைய கண்காட்சிகள் மக்கள் பணத்தைப் பறிக்கும் கருவிகள் என்றே கூறுதல் வேண்டும்.

மந்திரிகளுக்கும் மற்றவர் களுக்கும் மனம் வருமா?

மத்திய மாகாணச் சட்ட சபையில் அங்கத்தினராக நியமிக்கப் பட்ட சர் கூஜா ராஜா, சட்டசபை அங்கத்தினருக்குத் தரப்படும் மாதச் சம்பளம் தமக்குத் தேவையில்லை என்று முதலமைச்சருக்கு அறிவித்துவிட்டார்.

இந்த ராஜா காட்டும் வழியில் நடக்க, சென்னை மாகாணத்து அமைச்சர்களுக்கும், சென்னைச் சட்ட சபைகளின் அங்கத்தினர்களுக்கும் மனம் வருமா?

சென்னை மாகாண அரசாங்கத்துக்குப் பணநெருக்கடி பெரிதாயிருக்கிறது. பல நல்லதிட்டங்களுக்கு பணம் இல்லாமற் போகிறது. பணமில்லாமையால், நாட்டு முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பல திட்டங்கள் நடைபெற முடியாதபடி தடைபட்டிருக்கின்றன.

இந்நிலையை ஓரளவேனும் சமாளிப்பதற்காக வேண்டி, தியாக புருஷர்களாக, நாட்டு நன்மைக்கெனவே தங்களைத் துறந்த தியாகிகளாகத்தேர்தல்காலங்களில் தம்மைப் பறை சாற்றிக்கொள்ளும் சட்டசபை அங்கத்தினர்களும் அமைச்சர்களும் சர் கூஜா ராஜாவின் மாதச் சம்பளத் தியாகத்தைப் பின்பற்றித் தங்கள் மாதாந்த வருவாய்களைத் தியாகம் செய்ய முன் வருவார்களா?

திருமணம்

திரு. எம். மணி அவர்களுக்கும் திருமதி. முனியம் மாளுக்கும் 16—9—49-ல் குரோம் பேட்டை புது நகரில் சென்னைச் சுயமரியாதைச் சங்க செயலாளர் தோழர் எம். எஸ். முத்து அவர்களின் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. அதன் நினைவாக ரூபாய் இரண்டு அளிக்கப்பட்டது. மகிழ்ச்சி!

கடவுளுக்கு இனி வேலை இல்லை!

நினைத்தபோது மழை பெய்வித்தலும், வேண்டாத போது மழையை நிறுத்தி விடுவதுமான ஒரு புதிய முறையைக் கண்டுபிடிப்பதில் விஞ்ஞானிகள் வெற்றி பெற்று விட்டனர். செயற்கை மின்னல்களைத் தோற்றுவிப்பது, அணைந்த எரிமலைகளைப் பொங்கச் செய்வது, எரி நக்ஷத்திரங்களை வீழ்த்துவது, முதலியவற்றையும் மனிதர்கள் செய்து விடமுடியும். எனவே கடவுளே செய்யமுடியும் என்று மக்கள் கருதியிருந்த பல காரியங்களை மனிதனே செய்யக் கூடிய காலம் வந்துவிட்டதென்று பிரெஞ்சு அறிஞர்கள் கருதுகின்றனர். மழைவருவதும் பிள்ளை பெறுவதும் மனிதர்கள் முன் கூட்டி அறியமுடியாத கடவுள் செயல் என்னும் பழமொழி பொய்த்து விட்டது.

நினைத்தால் மழைபெய்யவைப்பது இனி மனிதனால் முடியும். குழந்தைபெற வேண்டுமென்று விரும்பினால் பெறுவதும் விரும்பாதபோது கருக் கொள்ளாதிருப்பதும், கருவில் பிள்ளை முதிர்ந்தவுடன் மாதக்கணக்கைப் பற்றிக் கவலைப்படாமல்பிள்ளைபெறுவதும், ஆணின்றியே, பிள்ளை பெறவிரும்பும் பெண்கள் பிள்ளை ஆவலுற்றுப் பெறுமாறு செய்வதும், எந்தவிதமான பிரசவ வேதனையுமின்றிப் பிள்ளைபெறச் செய்வதும் இன்றைய விஞ்ஞானத்தின் வெற்றிகள். இவைகளை அனுபவித்தறிபவர்கள் கடவுளுக்கு இவ்வுலகில் என்ன வேலை என்று கேட்பதில் வியப்பில்லை அல்லவா?

மக்காச்சோளம் :: :: பார்த்திருக்கிறீர்களா?

மவுண்ரோடு வந்துபாருங்கள்!

இந்தியாவின் கவர்னர் ஜெனரல் வீட்டுத் தோட்டத்தில் பயிரான மக்காச சோள மாவு பார்த்துள்ளீர்களா? பார்த்ததில்லையாயின் சென்னை மவுண்ட்ரோடுக்கு வந்து பாருங்கள்! ரயில்வேக்கட்டணத்தை பற்றிக் கருத வேண்டாம். கவர்னர் ஜெனரல் தோட்டத்து விளைவென்றால் அதைப் பார்க்க வேண்டாமா?

மாவாகவே விளைந்து விட்டதாகக் கருதிவிட வேண்டாம். உங்கள் வயல்களில் விளைந்தமாதிரிதான் மக்காச்சோளமாக விளைந்து, பின் மாவாக அரைக்கப்பட்டது.

பின் மக்காச்சோளத்தைப் பார்ப்பானேன் என்று கருதுகிறீர்களா? கோவை ஜி. டி. நாயுடு விளைத்தது போல, ஒரே செடியில் பல கதிர்களை விடுமாறு செய்யப்பட்ட செடியின் விளைவு போன்றதோ என்று வியக்கின்றீர்களா? அதெல்லாம் ஒன்றுமில்லை. சாதாரண மக்காச் சோளம்தான்.

திரு. ஜி. டி. நாயுடு வியப்புண்டாகும் வகையில் ஒரே செடியில் விளைத்த சோளக்கதிரை மக்கள் கண்டு மகிழ, நாடெங்கும் காட்டப்பட, அல்லது அம்முறையை நாடெங்கும் பரப்பி, ஏராளமான விளைச்சல் உண்டாக முயற்சி செய்யப்படவில்லையே, இந்தச் சோளத்திற்கு மட்டும் என்ன அப்படி விளம்பரப்படுத்த வேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டது என்கிறீர்களா?

கவர்னர்-ஜெனரல் வீட்டுத் தோட்ட விளைவு என்பதுதான் அவ் விளம்பரத்துக்குரிய பெருமை, அதைசசெய்ய இதை அதற்கான எடுபிடிகளும் இருக்கின்றன அல்லவா?

சோள மாவு காட்சிக்கு வந்ததைப் போல, கத்தரிக்காய், பாகற்காய், கலைக்காய், பூசணிக்காய், அவரை முதலியவைகள் காட்சிக்கு வருவதிலும் வியப்பில்லை.

இன்றைய இந்திய கவர்னர் ஜெனரல் சென்னை முதலமைச்சராயிருந்த காலத்து, தம் துணியைத் தாமே வெளுத்துக் கட்டிக்கொண்டதும் விளம்பரப்படுத்தப்பட்டது. தோழர்களுக்கு நினைவிருக்கலாம்.

இனிமேல், கவர்னர் ஜெனரல் உடுப்பணியும் முறை, தண்ணீரில் தலை முழுகுவது, பிளேட்டில் சாப்பிடுவது, முதலிய முறைகளும், அவருடைய கைக்குட்டை, பேனா முதலியவைகளும் காட்சிக்கு வரலாம்.

தார்பாய்ச்சி வேட்டி கட்டும் முறை, உச்சிக்குடுமி, பூணூல் முதலிய நாகரிகங்கள் மேனாடுகளில் காட்சிக்குப் போகலாம்.

இவ்வாறெல்லாம் நடந்தால் எவரும் வியப்படைவதற்கில்லை, இந்திய நாட்டின் முதல் கவர்னர் ஜெனரலே, வரலாற்றில் முக்கியக் காட்சிப் பொருளாகத்தானே விளங்குவர்! எனவே அவருடைய சீடர்கள் சோளமாவை இன்று காட்சிக்குக் கொணர்ந்திருப்பதில் வியப்பொன்றுமில்லை அல்லவா?

கும்பாபிஷேகத்தில் கொட்டும் பணம்

வைத்தீஸ்வரன் கோவில் சுவாமி தம்பதிகட்கும் பரிவாரங்கட்கும் "அஷ்ட பந்தன சுவர்ணபந்தன" மகா கும்பாபிஷேகம் தருமபுர மடாதிபதியால் நடத்தப்பட்டது. மயூவத்தூர் சுவாமி தம்பதிகளுக்கும் கும்பாபிஷேகம் நடந்தது. மேலையூர் பிரியவிடைகளுக்கு (இதுவும் ஒரு சாமி) பதினாயிரத்துக்கு மேல் செலவிடப்பட்டது. போலகம் (தஞ்சை) சிவாலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடந்தது. இவ்வளவும் கடந்த சில நாட்களுக்குள் நடந்தேறிய வைபவங்கள்.

இவற்றை நிறை வேற்ற இப்போது என்ன அவசியமும் அவசரமும் நேர்ந்தது என்று அறிவாளி களாயுள்ளோர் அதிசயிக்கலாம். ஆனால், மதத்தின் பெயரால் பணமூட்டைகள் ஏதாவது ஒரு வேலை செய்து, பாமர மக்களைப் பாமரத் தன்மையிலேயே அழுத்திவைத்திருக்க கொண்டிருக்கவேண்டுமே! அதற்கு இது ஒரு வழி.

ஆனால், அரசாங்கம் பொதுமக்கள் முன்னேற்றத்தில் அக்கறையுடையதாயிருந்தால்; இத்தக் கும்பாபிஷேக வீண் செலவுகளை நிறுத்தி, இவை செய்யாவிட்டால் சுவாமிகள் செத்துப் போகும் என எவரேனும் கூறினால், நாட்டில் நேர்ப்பட்ட பஞ்சத்தைத் தீர்க்கத் தெரியாத மக்கள்வறுமை பிணியை ஓட்டத்தெரியாத இந்தச் சாமிகள் செத்துத் தொலையட்டும் என்று கூறி; இத்தகைய வீண்செலவுகளுக்காகும் பணத்தை மக்கள் கல்வி வளர்ச்சிக்காக, நாட்டின் தரிசு நிலங்களைப் பயிர் விளையும் நிலங்களாக்குவதற்க்கச் செலவிட முன்வந்திருக்குமல்லவா?

அந்தோ! மக்கள் நிலையைக் கவனிப்பார் அரசாங்கத்திலோ அன்றி மதத் தலைமைப் பீடங்களிலோ யாருளர்? அரசாங்க பீடத்திலுள்ளோர் அரசியல் ஆதிக்கம் கருதி, மக்களை மடமையில் ஆழ்த்தி வைக்கவிரும்பினால், மத பீடத்திலுள்ளோர் மத ஆதிக்கம் கருதி, மக்களை மடமையில் ஆழ்த்தி வைக்க முயல்கின்றனர். இந்நிலை மாறவேண்டுமானால், மக்கள் தாமகளாகவே, உணர்ச்சி பெற்றுத் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ள முன் வர வேண்டியதைத் தவிர வேறு வழி ஒன்றுமில்லை.

C. N. அண்ணாத்துரை திராவிடர் கழகம்

தூத்துக்குடி, செப். 5.—

ஜெனரல்பாடிக் கூட்டம், 4-9-49. ஞாயிற்றுகிழமை மாலை 8 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் நா. கிட்ணன் தலைமையின் கீழ் நடைபெற்றது. அது சமயம் கீழ்க்கண்ட நிருவாகஸ்தர்களை ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டது. மேலும் பல தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

நிருவாகஸ்தர்கள்

இ. வயணப்பெருமாள் - தலைவர்; ஜே. ராசமணி - உப தலைவர்; சு. கா. வெள்ளைச்சாமி காரியதரிசி; வீரபாகு-உப காரியதரிசி; க. கருப்பசாமி பொகிஸதார்; இ. தீதிருசன் ஆடிட்டர், கமிட்டி மெம்பர்கள். 8. பேரும் முறையே தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

கழகத்தோழர்கள் யாரிடமும் நம்பிக்கை இல்லை என்று சொல்லி, தமக்கும், கழகத்திற்கும், வாரிசாக ஆக்கிக்கொள்ள, பொருந்தாத் திருமணம் செய்து கொண்ட பெரியாரின் போக்குக்காக வருந்தியும், பெரியாரின் சர்வாதிகார போக்கு கொண்ட தலைமையை வெறுத்தும் அவர்மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவித்துக் கொள்வதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது. எனச் செயலாளர் தோழர் சு. கா. வெள்ளைச்சாமி எழுதுகிறார்.

கல்லிடைக்குறிச்சி திராவிடர் கழகம்

கல்லிடைக்குறிச்சி, செப். 13.— 7—9—49 அன்று மாலை நடந்த அங்கத்தினர்கள் பொதுக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

தீர்மானம்:—கல்லிடைக் கழக அங்கத்தினர் கூட்டத்திற்கு சே. எஸ். சுப்பிரமணியன் கொண்டு வந்தத் தீர்மானம் பின் வருமாறு.

"பெரியார் திருமணம் பொருந்தாத் திருமணம் என்பதாலும் பெரியார் திருமணம் கழகத்திற்கு நன்மை பயப்பதாய் இல்லை என்பதாலும் கழக முக்கியஸ்தர்களின் பேரில் நம்பிக்கை யில்லை என்று அவர் சொல்வதாலும் இனிமேல் கழகம் நடக்க வேண்டியதிருப்பதால் பெரியார் தலைமையில் பணியாற்றக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்". என்பதாகும், தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. எனக் கழகசெயலாளர் எழுதுகிறார்.

சென்னைக் குழந்தைகள் கல்வித் திட்டம் தயாரிக்க

வடநாட்டு நிபுணத்துவம் தேவையா!

பத்துவயதுக்குட்பட்ட குழந்தைகளின் கல்வி பற்றிய ஒரு திட்டம் தயாரிப்பதற்காக அரசாங்க சார்பற்றதான குழந்தைகல்வி கல்வித் திட்டம் தயாரிக்க, ஒரு விசேஷ போர்டு அமைக்கப்பட்டுளது. அதில் ஹரிபால்திரிவேதி, டாக்டர் பாபு, திரிலோசேகர், சுப்பாராவ், சர்மா ஆகியோர் அங்கத்தினர். குழந்தைகள் கல்வித்திட்டம் தயாரிக்கும் திறமை பெற்றவர் தமிழர்களுள் ஒருவருமே இல்லையா?